**தலைப்பு 206 - கலாச்சார அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 மற்றும் 1.6.2 (அ) ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்ட முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சுற்றிக்கை ஏற்பாடுகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தேவைப்பாட்டிற்கு முரணான சந்தர்ப்பம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் இன்னும் அறிக்கையிப்பட வேண்டிய நிதியல்லாச் சொத்துக்கள் காணப்பட்டால் அவை முறையாக இனங்காணப்பட்டு கிரயத்திற்கு அல்லது கிரயம் இனங்காணப்படாவிட்டால் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கணக்கில் எடுக்கப்பட வேண்டியதுடன் 2020 ஆம் ஆண்டு வரையில் அனைத்து நிதியல்லாச் சொத்துக்களும் கணக்கிடப்பட்டு முடிக்கப்பட வேண்டியதுடன், | 267/2018 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பொது அறிவுறுத்தல் 8 (8:1) மற்றும் (8:2) இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று சிகாஸ் வேலைத்திட்டத்தின் மூலம் பேணப்பட்டு வருதல் போதுமானதெனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் மென்பிரதி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத் திற்கு சொந்தமான சகல நிதியல்லாச் சொத்துக்களும் இனங்காணப்பட்டு கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணக்கில் எடுக்கப்படல் வேண்டும். |

திணைக்களத்திற்கு சொந்தமான 05 கட்டிடங்கள், ரூபா 53,400,000 கிரயமான 14 வாகனங்கள், பெறுமதி குறிப்பிடப்படாத 11 வாகனங்கள் மற்றும் 3.7371 ஹெக்டயர் அளவிலான 05 காணிகள் என்பன 2020 திசெம்பர் 31 வரையில் கணக்கில் எடுக்கப்படவில்லை.

**1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணங்கள் கணக்கிற்கான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் வரவு மிகுதி மற்றும் திறைசேரி கனணி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் வரவு மிகுதிக்கிடையே ரூபா 444,761 ஆன வேறுபாடு காணப்பட்டதுடன் 2004 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து காணப்பட்டு வருகின்ற இவ் வேறுபாடு இனங்காணப்பட்டு கணக்குகளில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2004 இற்கு முன்பிருந்து காணப்படுகின்ற இவ் வேறுபாட்டிற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணக் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் திறைசேரி கணனி அறிக்கையின் பிரகாரம் மிகுதியில் வேறுபாடு இனங் காணப்பட்டு கணக்குகளில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இடம் மாற்றலாகிச் சென்ற அதிகாரி ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 23,500 முற்பணக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட கடன் மிகுதியான ரூபா 23,500 தீர்க்கப்பட்டு விட்டதாக அனுமானிக்கப்படுவதுடன் அது உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய அனைத்து கடன் மிகுதிகளையும் கணக்கில் எடுப்பதற்குக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கின் தனிப்பட்ட மிகுதிகள் வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மிகுதிகளுக்கிடையே ரூபா 84,513 ஆன வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டவுடன் உங்களுக்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வேறுபாட்டிற்கான காரணம் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நடனப் பயிற்றுவிப்பாளர் அதிகாரி பதவியில் சேவையாற்றிய அதிகாரி 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் முறையே சீனா மற்றும் கொரியா ஆகிய நாடுகளிற்கான வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் பங்குபற்றியிருந்த துடன் வெளிநாட்டுப் பயணங்களுக்கான உரிய கோவைகள் பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. | வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்கான கடமை நடவடிக்கைகள் இத் திணைக்களத்தின் கலைஞர்கள் உறவுகள் பிரிவிற்கு 2016 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வருடத்திலிருந்து இற்றை வரையில் உரிய கோவைகள் அப்பிரிவினால் முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. | வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்கு உரிய அனைத்து கோவைகளும் முறையாகப் பராமரிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு பணமாக வருமானத் தலைப்பு 2004.01.00 இன் கீழ் மத்திய அரசின் ரூபா 17,463,012 திணைக்களத்திற்குக் கிடைத்திருந்த போதிலும், அதற்கான வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2004.01.00 இன் கீழ் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம், வருமான மதிப்பீட்டிற்கு இற்றை வரையில் உள்ளடக்கப்படாததுடன் எதிர்வரும் வருடத்திலிருந்து | கிடைப்பதற்குத் திட்டமிடப்பட்ட அனைத்து வருமானங்களும் மதிப்பீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | அந்த வருமானம் வருமான மதிப்பீட்டில் உள்ளடக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் செலவு விடயங்கள் 42 இற்கான ரூபா 55,744,019 மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 11 இற்கான ரூபா 141,109,951 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் திருத்திய மதிப்பீட்டு ஒதுக்கங்களில் நூற்றுக்கு 6 வீதத்திலிருந்து நூற்றுக்கு 100 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமை காரணமாக காணப்பட்ட பொதுச் சுகாதார அளவுகோல்களின் அடிப்படையில் வேலைகள் செய்ய வேண்டியிருந்தமையால் 2020 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களில் தடங்கல்கள் ஏற்பட்டமை இதற்கான காரணமாகும். | செலவு மதிப்பீடு யதார்த்தமாகத் தயாரித்தல் தொடர்பாக முகாமைத்துவத் தின் கவனம் கோரப்படல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றின் பிரகாரம் 11 மீண்டெழும் செலவு விடயங்களுக்கான ரூபா 1.548,821 ஆன மிகுதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் அதில் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக 2021 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 2020 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் விடயங்கள் 13 இன் கீழ் ரூபா 4,801,039 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் மொத்தக் | 2020 திசெம்பர் 31 வரையில் நிதிப் பிரிவிற்கு கிடைத்த பொறுப்புக்கள் மற்றும் ஏற்படுத்தப்பட்ட கடப்பாடுகள் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் கிடைக்கின்ற பொறுப்புக்களுக்காக நி.பி 115 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படடடது. | செலுத்த வேண்டிய அனைத்து பெறுமதிகளும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 4,801,039 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) திணைக்களத்தினால் டவர்ஹோல் தியேட்டருக்குச் செலுத்த வேண்டிய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ரூபா 1,053,000 ஆன மிகுதி அம்மன்றத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருக்கவில்லை. | டவர்ஹோல் மன்றம் இற்றை வரையில் பற்றுச்சீட்டுக்கள் அல்லது அது சம்பந்தமான கோரிக்கைகளை அறிவிக்கவில்லை. | செலுத்த வேண்டிய அனைத்து பெறுமதிகளும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப் படுதல் வேண்டும். |

**2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியபோதிலும், அம்முறைமையின் பயனுறுதி தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக பேணப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும், அம்மீளாய்வு ஒன்று எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணப்பட்டு வருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டு வருவதுடன் அதன் பயனுறுதி அனைத்து சந்தர்ப்பங்களிலும் மீளாய்வு செய்யப்பட்டு முறைமை பயனுள்ளதாகப் பரீட்சிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | | | |
| (i) | 4.2.3 ஆம் உப பிரிவு | ஓய்வூதியம் பெறும் தறுவாயில் உள்ள 05 அதிகாரிகளுக்கு மீளாய்வாண்டின் இடர்கடன்களை வழங்குவதில் 23 ஆம் பின் இணைப்பில் காட்டப்பட்ட மாதிரிப் படிவத்தின் பிரகாரம் எழுதப்பட்ட இரத்துச் செய்ய முடியாத உறுதிமொழிக்கான கையொப்பம் அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியம் பெறும் தறுவாயிலுள்ள அதிகாரிகள் இதுவரை கடன் கேட்டு விண்ணப்பிக்கவோ அல்லது இடர்கடன் வழங்கப்படவோ இல்லை. ஓய்வு பெறுவதற்கு நெருக்கமான அதிகாரிகள் கடன்களைப் பெறும் பொது 23 ஆம் பின் இணைப்பில் கையொப்பங்களைப் பெறுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். எனினும், ஓய்வூதியப் பெற்றுச் சென்ற அதிகாரிகளின் இடர்கடன் மிகுதி இருந்தால் மாற்றப்பட்ட ஓய்வூதியத்தில் அறவிடப்படுவதற்கு ஓய்வூதியம் வழங்கும் ஆணையத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 4.2.5, 4.5 மற்றும் 4.6 உப பிரிவுகள் | 05 வருடங்களுக்கு மேற்பட்ட மரணித்த அதிகாரிகளின் அறவிட வேண்டிய ரூபா 23,931 ஆன கடன் மிகுதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பெற்ற கடன் தொகையை அறவிட முன்னர் அதிகாரி ஒருவர் இறந்தால் அவரது வாரிசுகளுக்குச் செலுத்த வேண்டிய தொகையிலிருந்து அறவிடுவதற்கு மரணித்தவர் தொடர்பான | கடன் தொகை மீளச் செலுத்தி முடிக்கப்படுவதற்கு முன்னர் இறந்த அதிகாரியின் கடன் மிகுதி தொடர்பாக தாபன கோவையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விபரங்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 4.5 உப பிரிவு மற்றும் 2015 ஒக்டோபர் 09 ஆந் திகதிய PPD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3(உ) பந்தி | 05 வருடங்களுக்கு மேற்பட்ட வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட இரண்டு அதிகாரிகளின் அறவிட வேண்டிய ரூபா 36,380, இனங்காணப்படாத 05 அதிகாரிகளின் அறவிட வேண்டிய ரூபா 23,923 மற்றும் சேவையிலிருந்து விலகிய 09 அதிகாரிகளின் அறவிட வேண்டிய ரூபா 82,923 ஆன கடன் மிகுதிகள் அறவிடப்படுவதற்கு ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட மற்றும் சேவையிலிருந்து விலகிய அதிகாரிகளின் கடன் மிகுதிகள் நிர்வாகப் பிரிவிற்கு தெரியப்படுத்தியதன் பின்னர் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்பு கொண்டு கடன்களைத் தீர்ப்பதற்கு இணக்கம் தெரிவித்த அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் தொகை மீளச் செலுத்தி முடிக்கப்படுவதற்கு முன்னர் வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட மற்றும் சேவையிலிருந்து விலகிய அதிகாரிகளின் கடன் மிகுதி தொடர்பாக தாபன கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 189 | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 சனவரி வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத ரூபா 830,034 பெறுமதியான 59 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 59 காசோலைகள் வசூலிக்கப்படாது இருந்தமை தொடர்பாகத் தேவையான தகவல்களைத் தேடிக் கொண்டிருப்பதுடன் தகவல்கள் கிடைத்ததும் உடனடியாகத் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தி | அரச அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற 23 ஊழியர்களுக்கான 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகப் பேணப்பட்டு வரும் ரூபா 90,568 ஆன கடன் மிகுதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய பாதகமான சூழ்நிலை காரணமாக அத்தியாவசியக் கடமைகளுக்கு முன்னுரிமை அளித்தமையில் 2020 ஆம் ஆண்டில் அப்பணிகளை முடிப்பதற்கு முடியாதிருந்தது. ஆனால் 2021 ஆம் ஆண்டில் | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | இக்கடன் மிகுதிகளை அறவிடுவதற்கு அல்லது தீர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுக்குமாறு விடயப்பரப்பு அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.6 வங்கி கணக்குகளின் செயற்பாடு**

வங்கிக் கணக்குகளின் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி இணக்கக்கூற்றில் 2014 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருகின்ற மொத்தம் ரூபா 3,040 ஆன 02 மிகுதிகள் மற்றும் இனங் காணப்படாத கொடுப்பனவுகளை தொடர்ந்து காட்டப்பட்டிருந்த 2018 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்திய வருடத்திற்கான மொத்தம் ரூபா 28,851 ஆன 09 காசோலைகள் இனங்காணப்பட்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்திய வருடங்களிலிருந்து காணப்பட்டு வருகின்ற இக் கொடுப்பனவுகள் மற்றும் காசோலைகள் தொடர்பான சரியான தகவல்கள் இன்னும் கிடைக்காததுடன் அத்தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. தீர்க்கப்பட்டதன் பின்னர் விரைவில் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இனங்காணப்படாத கொடுப்பனவுகள் மற்றும் காசோலைகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் | வருடாந்த செயலாற்று அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை கணக்காய்வுத் தினமான 2021 மே 31 வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | வேண்டும். |

**3.2 பெறுகைகள்**

தேசிய கலைக்கூடத்தின் புனரமைப்புத் தொடாடபாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய கலைக்கூடத்தின் புனரமைப்பிற்காக 2020 ஒக்தோபர் 29 ஆந் திகதிய அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 15 ஆந் திகதிய அமப/20/1760/305/010 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் கட்டிடம் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக இடித்து நீக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கான தற்காலிகத் கூரையொன்று நிர்மாணித்தல் மற்றும் உடைந்த சுவர்களை நீக்குவதற்காக கடற்படையினால் ரூபா 8,362,898 செலவு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான செலவு அதிகபட்சம் ரூபா 6,159,450 (வரி நீங்கலாக) ஆக மதியுரைச் சேவைகளை வழங்கும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலைப்பிரிவின் | மதிப்பீட்டை விஞ்சியதான பணம் தற்காலிகக் கூரை மற்றும் இயந்திரங்களுக்கான கிரயம் என்பதுடன் அதில் ரூபா 1.5 மில்லியன் கழிவுப் பெறுமதியில் ஈடு செய்யப்பட முடியும் என்பதாகவும் மதியுரை சேவைகள் நிறுவகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பெறுகைக் குழு அது தொடர்பாக கவனம் எடுப்பதாகவும் குழுத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. | இவ்வாறான சிக்கனமற்ற செலவுகள் தடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், செலவு மதிப்பீடு ரூபா 2,203,448 இனை தாண்டியிருந்ததாலும் கடற்படையினரின் மதிப்பீடு பெறுகைக் குழுவினால் 2020 திசெம்பர் 21 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் இப்பணி கடற்படைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டி 8.9.1 இன் பிரகாரம் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படுவதற்கு மற்றும் வழிகாட்டி 5.4.8 இன் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பொன்று பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | கடற்படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணப் பணிகளுக்கு எந்தவொரு நிறுவனமொன்றுடனும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதில்லை எனவும் மற்றும் செயலாற்றல் பாதுகாப்பு சமர்ப்பிக்கப்படுவதில்லை எனவும் கடற்படைத் தளபதி 2021 ஏப்ரல் 23 ஆந் திகதி கடிதமொன்றை சமர்ப்பித்திருந்தார். | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | குறிப்பிட்ட பணியை ஆரம்பிப்பதற்காக பெறுகை வழிகாட்டி 5.4.4 இன் பிரகாரம் வழங்கப்பட முடியுமான அதிகபட்ச முற்பணம் ரூபா 1,520,527 என்பதுடன் ரூபா 5,500,000 ஆன முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் முற்பணப் பாதுகாப்பொன்று பெறப்பட்டிருக்கவில்லை. | இப்பணி அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் நேரடி அடிப்படையில் என்பதால் அரச நிறுவனமொன்றாக கடற்படைக்கு முன்மொழியப்பட்ட புனரமைப்புக்களுக்குத் தேவையான இடிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்கள், தேவையின் பிரகாரம் பணமாகச் செலுத்தப்படுவதால் திணைக்கள பெறுகைச் சபையின் அங்கீகாரம் மற்றும் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டி பிரகாரம் முற்பணம் பாதுகாப்பொன்றின் அடிப்படையில் மட்டுமே பணிகள் ஆரம்பிக்கப் படுவதற்கான முற்பணம் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பணிக்கான மதியுரை சேவைகள் மொரட்டுவ பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்படாது மொத்த மதியுரைக் கட்டணமான ரூபா 1,500,000 இல் நூற்றுக்கு 94 வீதம் அதாவது ரூபா 1,410,000 செலுத்தப்பட்டிருந்தது. | மதியுரை சேவைகள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல் வேண்டும். | மதியுரை பணிகளுக்காக ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டு ஒப்பந்தத்தின் படி செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | கட்டிடத்தைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட அமைச்சரவைப் பத்திரம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கும் போது அவசரப் பராமரிப்பு பணியாகக் கருதப்பட்டு 2020 திசெம்பர் 03 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 19 வரையான காலப்பகுதியில் ரூபா 269,996 ஆன செலவொன்று செலவிடப்பட்டு கட்டிடத்திற்கு வர்ணம் பூசப்பட்டு மற்றும் நிலப்பரப்பு அலங்கார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் 2020 திசெம்பர் 31 இல் கட்டிடம் உடைத்து நீக்கப்பட்டமையால் ரூபா 269,996 செலவு விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | தேசிய கலைக்கூடக் கட்டிடத்தின் வர்ணம் பூசுதல் மற்றும் நிலப்பரப்பு அலங்கார நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கலாச்சார அமைச்சின் 2020/12/01 ஆந் திகதிய குறிப்பின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அன்றுவரை குறித்த அமைச்சரவை முடிவுகள் கிடைக்காமையால் குறிப்பிட்ட கட்டிடம் விரைவில் உடைத்து நீக்கப்படுமென்பது அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்குத் தெரிவித்திருக்கவில்லை. | இவ்வாறான விவைற்ற செலவுகள் தடுக்கப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தேசிய கலைக்கூடப் புனரமைப்பு பணிகளுக்காக திணைக்களப் பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாத காரணத்தினால் குறிப்பிட்ட பெறுகை அதிகாரசபை வழிகாட்டி 2.14.1 இற்கு இணங்கியுள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படாததுடன் வழிகாட்டி 2.8.1 இன் | மொத்த கிரய மதிப்பீட்டிற்கான அதிகார எல்லை திணைக்களப் பெறுகை குழுவின் கீழ் வருவதால் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்புனரமைப்பு பணிகளில் முதலாம் கட்டமாகத் தேவையான ஆரம்ப இடிப்பிற்கான விலைமனு அறிக்கையொன்று பெறப்பட்டமை இதற்கு முன்னர் தேசிய போட்டி ஏல | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பணிகளுக்கான மொத்தக் கிரயம் மதிப்பீடொன்று தயாரிப்பதற்கு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | முறைமையின் கீழ் விலை மனுக்கள் கோருவதற்கு தயாரித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்களப் பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணப் பத்திரங்களின் (BOQ) அடிப்படையிலேயே ஆகும். ஆரம்ப இடிப்புக்களின் போது முழுமையான கட்டிடக்கலை மதியுரை சேவைகளை வழங்கும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை மதியுரைச் சேவைப்பிரிவிடமிருந்து பெறப்பட்டமையால் மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் நேரடி அடிப்படையில் அரச நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணப் பணிகள் என்பதால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உதவியை பெற வேண்டிய தேவை ஏற்படவில்லை. | வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 3.6517 ஹெக்டயரான 05 காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக எவ்வித பதிவேடுகளும் திணைக்களத்தினால் பேணப்படாமையுடன் காணிகளின் உரிமைகளைக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | ஹெக்டயர் 3.2701 ஆன 03 காணிகளின் உரிமை தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை. ஹெக்டயர் 0.3816 ஆன 02 காணிகளைக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | திணைக் களத்திற்குச் சொந்தமான காணிகளின் உரிமைகளைக் கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 41 ஸ்ரீ 9416 ஆம் இலக்க லொறி கலாச்சார, சமய மற்றும் பௌத்த அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் சட்டரீதியாக கையேற்கப்படவில்லை. | கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கோரிக்கையின் படி கடமைகளுக்காக 41 ஸ்ரீ 9416 ஆம் இலக்க லொறி தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டு முறையாகக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | வாகனம் இந்நிறுவனத்திற்கு கையளிக்கப்படும் போது சட்டரீதியாகக் கையளிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இலிருந்து 893 வரையான பிரமாணங்கள் மற்றும் 612 ஆம் அதிகாரத்தின் அடிப்படையில் அரச உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய 52 உத்தியோகத்தர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2019 நவம்பர் 25 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 07/2019 இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அளவு மற்றும் பிணை வைக்க வேண்டிய முறைகள் தொடர்பாக அமைச்சின் செயலாளரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு 2020 யூலை 24 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அறிவுறுத்தல் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அதன் பிரகாரம் அறவீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2011 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு பதவியை நிரப்புவதற்கு 2021 மே மாதம் வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக அதிகாரிகள் திணைக்களத்திற்கு ஆட்சேர்க்க முடியாததுடன் அப்பதவிக்காக பொது நிர்வாக அமைச்சின் மூலம் அதிகாரிகள் ஆட்சேர்க்கப்பட்டு இணைக்கப்படுகின்றனர். 2016 ஆம் ஆண்டிலிருந்து பொது நிர்வாக அமைச்சிற்கு காலத்திற்குக் காலம் உள்ளக அதிகாரியொருவரை நியமித்து தருமாறு கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப் படுவதற்கும் மற்றும் உள்ளகக் கணக்காய் வொன்று மேற்கொள்ளப் படுவதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திணைக்களத்தின் 850 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 125 அதாவது நூற்றுக்கு 15 வீதம் வெற்றிடங்களாகக் காணப்பட்டதுடன் அதில் 28 சிரேஷ்ட மட்டத்திலான பதவியணியில் 12 அதாவது நூற்றுக்கு 43 வீதம் வெற்றிடங்களாக காணப்பட்டது. | பதிப்பாசிரியர் பதவி 2 என்பது உதவிப் பதிப்பாசிரியர், பிரதிப் பதிப்பாசிரியர் பதவிகளின் பதவியுயர்வு என்பதுடன் அதற்காக வெளிவாரியாக ஆட்சேர்க்கப்பட முடியாது. 7 உதவிப் பதிப்பாசிரியர் பதவிகளை ஆட்சேர்ப்பதற்கு உரிய பரீட்சையானது பரீட்சைகள் திணைக்களத்தினால் 2021 யூன் மாதம் நடாத்தப்பட உள்ளது. மேலும், கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் | தேவையைக் கருத்திற் கொண்டு வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளை விரைவில் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

பதவிகளுக்கான அதிகாரிகளை ஆட்சேர்த்தலானது பொது நிர்வாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் குறிப்பிட்ட அதிகாரிகளை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.